[1993 மார்ச் 23

147—

அம்பத்தூர் பேருந்து நிலையம்

* 9307—திரு. கோ. காளன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[redacted] அம்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில் (Ambattur Old Terminal) பேருந்துகளை நிறுத்த போதிய இடவசதியில்லாத காரணத்தால் அருகிலேயே அமைந்திருக்கும் விஜயலட்சுமிபுரம், பூம்புகார் நகர், பிரத்திவீபாக்கம் ஆகிய பகுதிகளிலிருந்து சில பேருந்துகள் புறப்பட்டு அம்பத்தூர் Old Terminal வழியாக செல்ல அரசு ஆவனசெய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10-25

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பஸ் நிலையம் மிகவும் குறுகிய இடமாக இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இந்த இடத்தை விரிவுபடுத்தி பஸ் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஆனால் தற்போது சிறு கடைக்காரர்கள் எல்லாம் அந்த பஸ் நிலையத்தை ஆக்கிரமித்துள்ளதால் இடம் தற்போது மிகக் குறுகியதோடு மட்டுமல்லாமல் நூற்றுக்கணக்கான பஸ்கள் அங்கே வருகின்ற போது, மக்கள் ஒதுங்கி நிற்பதற்கும் பஸ்ஸில் ஏறுவதற்கும் கூட மிகவும் சிரமப்படுகின்ற நிலை உள்ளது. எனவே, தாங்கள் இருக்கக்கூடிய இடத்திலே சரியான பஸ் நிலையத்தை அமைப்பதோடு அதன் அருகில் உள்ள விஜயலட்சுமிபுரம் பூம்புகார் நகர், பிரத்திவீப்பாக்கம் ஆகிய இடங்களிலே உப பஸ் நிலையங்கள் அமைக்கப்படுமானால் அந்த நெருக்கடியைக் குறைக்க முடியும். எனவே, அந்த வகையிலே மக்கள் நலனிலே அக்கறை கொண்டுள்ள இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் அம்பத்தூர்-செங்குன்றம்

சாலையில் புதூர் என்கிற இடத்திலே இருக்கிறது. இப்போது பேருந்துகளை நாம் அங்கேதான் நிறுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு இடத்திற்கு அதை மாற்றி பேருந்து நிலையத்தைப் போடவேண்டும் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அம்பத்தூர் பேருந்து நிலையத்தில் சிறு வியாபாரிகள் கடைகளை வைத்துள்ளதால் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஒருபுறத்திலே சிறு வியாபாரிகள் அங்கே கடைகளை வைக்கின்ற நேரத்தில் அரசு அவர்களை அப்புறப்படுத்துகின்ற நேரத்திலே அதற்கும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்ற காரணத்தினாலேதான் இது போன்ற இடர்பாடுகள் ஏற்படுகின்றன. அது உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இருப்பினும், உறுப்பினருடைய கோரிக்கை மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிடுவதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் அவ்வாறு நான் தலையிடுவது கிடையாது. அது அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இருந்தாலும் நீண்ட நெடுங்காலமாக அந்த நெரிசல் பிரச்சினை இருப்பதால் உடனடியாக அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு முன்வருவார்களேயானால் உள்ளாட்சித்துறை அமைச்சரோடு நானும் அங்கே சென்று அவைகளை எப்படி அப்புறப்படுத்துவது என்று பார்த்து அதன் பிறகு அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 148, திரு. எம். தங்கவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.